UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# அக மரபும் உரை மரபும்

*ரா. திவ்யா

**முனைவர் சு. சீத்தாராமன்

**ஆய்வுச் சுருக்கம்**

தொல்காப்பியர் அகம், புறம் என்னும் இருவேறான நிலைக்களனை தொல்காப்பியத்தில் முன்வைக்கின்றார். இவ்விருப் பாடுபொருள்களைக் கொண்டு பொருளதிகாரத்தில் இயல் அமைப்பினை அமைத்துள்ளார். தொல்லாசிரியர் குறிப்பிட்ட மரபுகளின் அமைப்பில் அகம், புறம் என்னும் இரண்டு பாடுபொருட்களை முன்னிருத்தி இலக்கணம் பகர்கின்றார். அன்பின் ஐந்திணைகளாகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை அதனோடு கைக்கிளை, பெருந்திணை சார்ந்ததாகப் பாடப்பட்டுள்ளன. தொல்லாசிரியர் பொருளதிகாரத்தில் அகத்திணைக்கான இலக்கணங்களை நான்கு இயல்களில் விரிவாக எடுத்துரைக்கிறார். அவ்வாறு மொழியக்கூடிய இலக்கணங்களுக்கு உரையாசிரியர்கள் அக்காலத்தில் எவ்வாறு வழங்கப்பட்டன என்றும் அவர்களிடையே காணக்கூடிய வேற்றுமையை எடுத்துரைக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

**திறவுச் சொற்கள்:** தொல்காப்பியம், அகத்திணை, புறம், உரையாசிரியர்கள்

**முன்னுரை**

அகம் எனப்படுவது ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தம் உள்ளத்து உணர்வால் இன்புறுவதாகத் தொல்காப்பியர் வரையரைச் செய்துள்ளார். அகப்பொருள் இலக்கியம் என்று பெயர் பெற்றிருப்பினும், இல்லற வாழ்வு தொடர்பான செய்திகளும், இயற்கைச் சூழல்களும், அரசியல் போரியல் நெறிகளும், உயர்ந்த எண்ணங்களும் இலக்கியங்கள் வழி நமக்கு கிடைக்கின்றன. அவ்வாறு கிடைக்கக்கூடிய தரவுகளின் வழி ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியுங் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்புறுவதொரு பொருளாதாலின் அதனை அகம் என்னும் அமைப்பில் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

**அகப்பொருள் விளக்கம்**

'அகம்' என்பது பொதுவாகக் காதற்பாடல் களையும் உள்ளத்தில் புலப்படும் உணர்வு

* பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்
உதவிப்பேராசிரியர், இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) கோயம்புத்தூர் – 641 028

** உதவிப்பேராசிரியர் நெறியாளர், தமிழ் உயராய்வுத்துறை,
அரசு கலைக்கல்லூரி, (தன்னாட்சி) கோயம்புத்தூர் – 641 018

களையும் அகப்பொருள் என்றும், போர், வீரம், கொடை, ஆட்சி, புகழ் முதலிய பிற வாழ்க்கைத் துறைகளைப் புறப்பொருள் என்றும் கூறுதல் தமிழரின் மரபாக வைத்துள்ளார். இலக்கியங்களுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் அகம் என்பதற்கு திணைகளையே வகுத்துச் செல்கின்றார். அதற்கு உரையெழுதிய இளம்பூரணர் அவர்கள் "அகப்பொருளாவது போக நுகர்ச்சியாகலான் அதனான் ஆய பயன் தானே அறிதலின் அகம்" (தொல்.பொ (இளம்.உரை.நூ.12) என தனது உரைக் குறிப்பில் அகத்திற்கான வரையறை செய்துள்ளதனை நுண்ணிதின் உணர முடிகின்றது.

**அகத்திணை**

குறிஞ்சி முதலான ஐந்தும் பொருண்மையில் ஒரே வகையாகவே எண்ணப்படுகிறது. ஒழுக்க நிலையினை விளக்கும் போது தனிநிலையில் குறிப்பதற்காக, 'ஐந்திணை' என்று எண்ணுப் பெயரால் குறிக்கப்படுகின்றது. "திணை என்ற சொல்லுக்கு ஒழுக்கம் என்னும் பொருளில் விளக்கப்படுகிறது. திணை இலக்கியங்கள் நிலத்தை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றன. இங்கு நிலமும், பருவப்பொழுதுகளும் இயற்கையின் பின்னணியாகக் கொண்டு மனித வாழ்க்கை யுடன் இணைத்துப் பாடப்படுகின்றது.

அகத்திணைக்குரிய உள்ளார்ந்த அன்பு நிலையை அறிய ஐந்திணையே பெரிதும் உறுதுணையாக அமைகின்றது எனலாம். கைக்கிளையாவது காட்சியளவிலே தோன்றி முடிந்து விடுகிறது. பெருந்திணையோ இயல்பு வாழ்விற்குப் பொருத்தமற்றதாக விளங்கு கிறது. எனவே ஐந்திணைத் துறைகளே சிறப்புற அமைகின்றன. இதன் காரணமாகத் தொல்காப்பியரும் ஐந்திணைப் பாகுபாட்டிற்கு முதலிடம் தந்துள்ளார். எனக் கருத இடமுண்டு. தொல்காப்பியர் ஐந்திணையை,

**"நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்**

**படுதிரை வையம் பாத்திய**
**பண்பே"** (தொ.பொ. (இ.உ) நூ.3)

என்று குறிப்பிடுகின்றார்.

'நடுவண் ஐந்திணை' என்பது முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்பனவாகும். இதனையே நம்பியகப் பொருளும்,

**"குறிஞ்சி பாலை முல்லை மருதம்**

**ஐந்திணைக்கு எய்திய பெயரே"** (அக.பொ. திருஞானசம்பந்தம் நூ.7)

என்று திணை வைப்பு முறையைக் கூறுகின்றது. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் இவ்வைந்திணைக்கும் பொருந்திய பெயர் என்று உரைக்கின்றது.

தொல்காப்பியப் பெருமகன் ஐந்திணையைப் பற்றிக் கூறுவதனையும் அதற்கு உரையா சிரியர்கள் கண்டு கூறும் கருத்துக்களை,

**"நடுவணைந் திணை நடுவணது ஒழியப்**

**படுதிரை வையம் பாத்திய பண்பே"அகத்.2**

என்னும் நூற்பாவில் இளம்பூரணர் ஐந்திணைக்குரிய நிலப்பாகுபாட்டினை, "அகமாவது புணர்தல், பிரித்தல், இருத்தல், இரங்கல், ஊடல் எனவும், கைக்கிளை, பெருந்திணை எனவும் ஏழுவகையாகப் பகுத்துக் கூறுகின்றார். "அகப்பொருளாவது போக நுகர்ச்சியாகலான் அதனான் ஆய பயன்தானே அறிதலின் அகம்" என்னும் செய்தியை உரைக்குறிப்பாகக் கூறுகிறார். மேலும், "புறப்பொருளாவது அறஞ்செய்தலும் மறஞ்செய்தலும் ஆகலான் அவற்றான் ஆய பயன் பிறர்க்குப் புலனாதலின் புறம்" என்று புறத்திணைக்கு உரையெழுதியுள்ளார். பொருளாவது சொல்லான் உணரப்படுவது இந்நூலகத்து விரித்துக் கூறிய பொருள் யாதெனின் காமப்பகுதியும், வீரப்பகுதியும் என்னும் உரையை எழுதிச் செல்கின்றார்.

பொருளாவது - அறம், பொருள், இன்பம் அவற்றது நிலையாமை அவற்றின் பகுதியாகிய முதல், கரு, உரிப்பொருள்கள் காட்சிப்பொருள், கருத்துப்பொருள் அவற்றின் பகுதியாகிய ஐம்பெரும்பூதம் அவற்றின் பகுதியான இயங்குதிணை நிலைத்திணை பிறவுமாம். ஏழுவகைத் திணையில் உரிமை வகையால் நிலம் பெறும் திணைகள் நான்கு திணை மட்டுமே கூறுகின்றார். பொது வகையாக நிகழ்வது கைக்கிளை, பெருந் திணை, பாலை என்னும் மூன்றினையும் நச்சினார்க்கினியர் வேறுபடுத்தி காட்டுவத னையும் உணரமுடிகின்றது.

நான்கு நிலத்திற்கும் நான்கு வகை ஒழுக்கம் பொதுவாய் நிற்பது. ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியுங் கடுங்காலத்துப் பிறந்த பேரின்பம் அக் கூட்டத்தின் பின் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாத தாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார். இதனை ஒழிந்தன ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லார்க்கு உய்த்துணரப்படுதலாம். இவை இவ்வாறி ருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுதலாலும் அவை புறமெனப்படும்.

நாவலர் பாரதியார்

அகத்திணையியல் மக்களின் அகவொழுக்கம் அல்லது காதலற வழக்குகளின் பொதுவிலக் கணம் என்றும், அகம் காதலர்களின் உளக்கிடையும், அவர் காதல் கதிர்த்து வினைப்பட்டு அன்னோர் மனையற வாழ்க்கை யில் தொடர்புறுவதுமாகவும், அகத்திணை காதல் கண்ணிய ஒழுகலாறு; ஒழுக்கப் பொதுவியல்பு கூறும் பகுதி அகத்திணை யியல் எனப் பெயர் பெற்றது. திணை முதலில் ஒழுக்கம் உணர்த்திப் பின்னர் ஆகுபெயர் நிலையில் நிலத்தை உணர்த்து வது. ஒழுக்கம் கருதாமல் நிலம் பற்றித் திணை வகுத்தல் பழமரபுனராது முரணப் படைத்த புதுவழக்காக கொண்டுள்ளதனைக் காணமுடிகின்றது.

பாவலர்

ஒழுகலாறு என்பதற்கு இலக்கணக்குறியீடு திணை. அகத்திணையியல் அகவொழுக்கத் திற்குரிய அடிப்படை இலக்கண மரபுகளை இருவகை வழக்கு பற்றிக் கூறும் இயல். அகமாவது தலைவன் தலைவி ஆகிய இருவரில் ஒருவரால் ஒருவரது உள்ளத்தெழும் இன்பமும் துன்பமும் ஆகிய உணர்வுகளை வெளிப்படுத்தி நிற்பதாகும். அகம் என்பது உள்ளத்தையும் இல்லத்தை யும் ஒருங்குணர்த்தி நின்று அகத்தே நிகழும் நிகழ்வுகளை அகம் என்பது ஆகுபெயராம்.

அகத்திணை என்னும், குறியீடு கைக்கிளை யும் பெருந்திணையும் இருவகை கைகோளி லும் அடங்காமல் அகவொழுக்கமாக நிகழ்தக் கூடியதாகும். மேலும், கைக்கினை பெருந் திணை என்னும் பெயர்கள் அவற்றின் ஒழுக்கமாகிய பண்பு இயல்புகளைப் புலப்படுத்திப் பெயர்க் காரணம் தோன்ற நிற்கின்றது. கைக்கிளையும், பெருந்திணை யும் நடுவணைந் திணையில் குறைவும் பெருக்கமுமாகிய விகாரங்களேயாதலின் அவை அகணைந் திணைக்கண் அடங்கி நிகழும். அவ்வாற்றால் அகத்திணை எனச் சிறப்பித்துக் கூறப்பெறுவன நடுவணைந் திணைகளேயாம்.

மு.அருணாசலம் பிள்ளை

கைக்கிளை பெருந்திணைகளின் சிறப்பின்மை கருதி விளக்கம் குறைவாகவும் அகத்திணைக் குரிய சிறப்புக்கள் கருதி மிகுதியாகவும் கூறப்பட்டுள்ளன. அகத்திணை ஏழில் ஐந்திணைக்குரிய சிறப்பியல்புகள் ஏனைக் கைக்கினை, பெருந்திணைகட்கு இல்லை. திணை ஏழு என்றாரேயன்றித் தொல்காப்பியர் அகத்திணை ஏழு என்று கூறியுள்ளதனைக் காணமுடிகிறது.

முடிவுரை

ஐந்திணையாவது ஒத்த அன்பால் உண்டாகும் இன்ப ஒழுக்கங்கள் என்றும், அவை ஆசிரியரின் கருத்துக்களில் மிகுவதனையும் அதனை உரையாசிரியர்கள் ஏற்று நடப்ப தனையும் நுண்ணிதின் அறியமுடிகிறது. தொல்காப்பியரின் அகப்பார்வையில் 'அகம்' என்னும் சொல் வீடு, மனம், உள், மார்பு, ஞானம், இருப்பிடம் போன்ற பல பொருள் களைத் தந்தாலும் மனம் ஒத்த ஆண் பெண் இருவரிடையே ஏற்படுகின்ற இன்ப துன்ப உணர்வினைக் குறித்தே பயன் படுத்தப்பட்டுள்ளது. திணை என்பது பெரும் பாலும் நிலத்தையும் சிறுபான்மை ஒழுக்கத் தையும் அடிப்படையாகக் கொண்டு வகுக்கப் பட்டுள்ளது. தொல்காப்பியரின் அகநோக்கில் சங்கப் பாடல்களைப் பார்க்கும் அனைத்திலும் அந்நிலத்தின் மன உணர்வுகளையே பாடு பொருளாகக் கொண்டு அமைந்துள்ளன.

**துணை நின்ற நூல்கள்**

1. அகத்திணைக் கொள்கைகள்: வித்துவான் ந. சுப்புரெட்டியார், பாரிநிலையம், 1981.
2. ஆராய்ச்சிக் கட்டுரைகள்: இரா. இராகவையங்கார், நியூன் ஈரா பப்ளிகேஷன்ஸ், 1987.
3. இறையனார் களவியல்: கழக வெளியீடு, 1953.
4. உரையாசிரியர்: வித்துவான். மு. வை. அரவிந்தன், மணிவாசகர் நூலகம், சிதம்பரம் 1968
5. தொல்காப்பியம் இளம்பூரணர்: கழக வெளியீடு, 1953.
6. தொல்காப்பியம் இளவழகனார்: கழக வெளியீடு, 1954.
7. தொல்காப்பியம் நச்சினார்க்கினியர்: கழக வெளியீடு, 1955.
8. தொல்காப்பியம் அகத்திணையியல் உரைவளம் வித்துவான்மு. அருணாசலம் பிள்ளை, 1988
9. தொல்காப்பியம் அகத்தினையியல் உரை வளம் ஆ. சிவலிங்கனார், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.1971
10. தொல்காப்பியம் பொருட்பலம் புறத்திணையியல் நாவலர் பாரதியார், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.1988
11. தொல்காப்பியம் புறத்திணையியல் உரைவளம் க. வெள்ளைவாரணம். உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.1985